# வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வழித்தடத்தில் 3-ஆவது நாளாக பாதுகாப்பு ஆணையர் ஆய்வு

## 80 கி.மீ. வேகத்தில் மெட்ரோ ரயில் இயக்கி சோதனை

சென்னை, பிப்.7: சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்கத் திட்டத்தில், வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வழித்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் 3-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார். மேலும், இந்தப் பாதையில் 80 கி.மீ. வேகத்தில் ரயிலை ஓட்டி மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் மற்றும் அவரது குழுவினர் ஆய்வு செய்தனர்.

இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அபய் குமார் ராய் மற்றும் அவரது குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை ஆய்வைத் தொடங்கினர். முதல் இரண்டு நாள்களில், வண்ணாரப்பேட்டையில் இருந்து தண்டையார்பேட்டை வரையிலான சுரங்கப்பாதைப் பணிகள் மற்றும் ரயில்நிலையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வசதிகள், விம்கோ நகர், திருவொற்றியூர், காலடிப்பேட்டை மற்றும் சுங்கச்சாவடி மெட்ரோ ரயில் நிலையங்களை ஆய்வு செய்தனர்.

புதிய வண்ணாரப்பேட்டை மற்றும் சுங்கச்சாவடி மெட்ரோ ரயில் நிலையங்களை மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அபய் குமார் ராய் மூன்றாவது நாளாக ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார். அவருடன் துணை ஆணையர்கள் இருந்தனர்.



வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் வரை சிக்னல் மற்றும் வேகத்துடன் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டத்தை ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்த பாதுகாப்பு ஆணையர் அபய் குமார் ராய். உடன் சென்னை மெட்ரோ ரயில் மேலாண் இயக்குநர் பிரதீப் யாதவ் உள்ளிட்ட உயரதிகாரிகள்.

மெட்ரோ ரயில் நிலையங்களின் உட்புறத்தோற்றம், பல்வேறு கட்டுமானப்பணிகள், பயணிகளுக்கான பாதுகாப்பு வசதிகள், அவசரத் தொலைபேசி வசதிகள், அறிவிப்புப் பலகைகள், மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள், ரயில் தண்டவாளத்தின் அமைப்பு, தண்டவாள தூண் தாங்கிகளின் ஸ்திரத்தன்மை, சிக்னல் அமைப்பு போன்றவை ஆய்வு செய்யப்பட்டு ஆவணங்களும் மதிப்பாய்வு செய்யப்பட்டன.

இதைத்தொடர்ந்து, அப் பாதையில் 80 கி.மீ. வேகத்தில் மெட்ரோ ரயிலை இயக்கி சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. அப்போது, சிக்னல் மற்றும் வேகம் தொடர்பாக சோதனை செய்யப்பட்டது.

இந்த ஆய்வின்போது, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், இயக்குநர் (திட்டங்கள்) ராஜீவ் நாராயண் திவேதி, இயக்குநர் (அமைப்புகள் மற்றும் இயக்கம்) ராஜேஷ் சதுர்வேதி மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.